மதிக்கிறோம் ; மரியாதை தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆனால், அண்ணா அவர்களுடைய பெயரை அறிவித்த பிறகு இரண்டு பெயர்கள் ஒன்றோடொன்று மோதும் நிலைமை ஏற்பட்டு, வருந்தத்தக்க சூழ்நிலை உருவாகி, இரண்டு பெயர்களும் இல்லை என்று ஆனபிறகு, ஒரு பொதுவான முடிவுக்கு வருவதுதான் சாலப் பொருத்தமாகும். இதற்குமேல் அவர்கள் இப்படிப்பட்ட கிளர்ச்சியில் இறங்குவது நல்லதல்ல. அதைத்தான் நான் இந்த மன்றத்தின் மூலமாக அவர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

Reorganisation of Information Department

* 226 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to streamline the Information Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தகவல் துறையைச் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Agitation against increase in postal rates

* 227 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. Chief Minister be pleased to state the number of arrests made in this State in connection with the agitation against increase in postal rates district-wise?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கோரப்பட்டுள்ள செய்திகளடங்கிய விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.[a]

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தக் கிளர்ச்சியில் கைது செய்யப்பட்டவர்கள் மீது ஏதாவது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா ? இந்தக் கிளர்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்குகொள்ளவில்லை. அதனால் அஞ்சல் கட்டண வீதங்களை உயர்த்துவதை ஒத்துக் கொள்ளுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : காங்கிரசும் பங்கு பெறவில்லை. அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that Congress Government at the Centre has levied this increase in tariff on postal rate? The Congress Party has not taken part in this agitation. Is it not a fact that the D.M.K. Party which was against this kind of increase was silent when this agitation was launched by other anti-Congress parties?

---

a 371-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : போராட்டத்தில் ஈடுபட வில்லை என்றாலும், அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் நோக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஆதரிக்கிறது. ஆனால், காங்கிரஸ் சர்க்கார் போட்டதை இங்குள்ள காங்கிரஸ் கட்சி எதிர்க்கவில்லை என்றார்கள். போகப் போக எதிர்க்க ஆரம்பித்துவிடுவார்கள், போகிற நிலைமையைப் பார்த்தால்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறித்து மூலக் கேள்வி அமைந்திருக்கிறது. இந்தக் கட்சி ஆதரிக்கிறதா, அந்தக் கட்சி ஆதரிக்கிறதா என்றெல்லாம் எப்படி அதிலிருந்து வரும்? வராது.

THIRU K. VINAYAKAM : One humble submission, Sir. The Hon. Speaker may not be right in saying that my question is out of order. In the note, partywise figures are given. That is why I asked whether some parties have taken part or not. My question is certainly in order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை இருக்கிறதா, இல்லையா என்பது வேறு. ஆதரிக்கிறதா, இல்லையா என்பது மூலக் கேள்வி யிலிருந்து எழாது என்றுதான் சொல்லுகிறேன்.

World Bank Chief—Chief Minister meet

* 228 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the World Bank Chief met the Chief Minister about the 22nd November 1968?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கித் தலைவரைச் சந்தித்து, மாநில அரசின் சார்பில், தமிழக முதல் அமைச்சர் என்னென்ன பணிகளுக்கும் கடன்கள் கோரியிருந்தார்கள்? கோரிக்கைகள் என்னென்ன, அவர்கள் ஏற்றுக் கொண்டவை என்னென்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கோரிக்கைகள், அல்லது கடன் தேவை போன்ற முறையீடுகளை மாநில அளவில் தர முடியாது; மத்திய சர்க்கார் மூலம் தான் உலக வங்கிக்குத் தரமுடியும். முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் திரு. மெக்னமாராவுடன் கலந்து பேசிய பின்னர் பத்திரிகையாளரிடம் பின் வருமாறு தெரிவித்தார். ‘பாசனமே வேளாண்மையில் நமது முட்டுக்கட்டை; நாம் இறைவைப் பாசனத்தையே பெரிதும் நம்பி யுள்ளதால், வலிமையுள்ள துளைக்கருவிகளும், மின்விசை ஏற்றக் கருவிகளும் தேவையென்றும், இம் மாநில அரசு குடியானவர் களுக்குத் தாராளமாகக் கடன் வழங்குவதாகவும், உழவுத் தொழிலுக்கு உதவி செய்வதாகவும், உலக வங்கித் தலைவரிடம் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டார்’. தண்ணீர் தேங்குவதைத்